# கண்ணகி நாவல் சுட்டும் மகளிர் பிரச்சனைகள்

**கி.மு.ஈஸ்வரி**
கௌரவ விரிவுரையாளர்
தமிழ்த்துறை
எம்வி.முத்தையா அரசினர் மகளிர் கலைக்கல்லூரி திண்டுக்கல்

---

## முன்னுரை

உலக அளவிலேயே பெண் மக்களின் தொகை செம்பாதியாக இருந்தாலும் கூட பெண்களின் முன்னேற்றம் என்பது இலக்குகளை இன்னும் கூட எட்டவில்லை. பெண்களின் சமத்துவ வாழ்வுக்காக எத்தனை பணிகள் செய்யப்பட்ட பின்பும் பெண்கள் இன்னும் முழுமையான விடுதலை பெற்று ஆணுக்கு நிகரான வாழ்வை பெற முடியாத நிலையில் உள்ளனர். பெண் விடுதலை பெற வேண்டி, பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருப்பினும் இன்னும் முழுமையான சமத்துவம் கிடைக்கப் பெறவில்லை என்றே கருதலாம். ராஜம் கிருஷ்ணன் வாஸந்தி போன்ற பெண்புனைகதைப் படைப்பாளர்களின் வரிசையில் அண்மையில் எழுதிக் கொண்டிருக்கும் நாவலில் இவர் எழுதிய கண்ணகி புதினத்தில் இடம் பெறும் மகளிர் சிக்கல்களை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

## குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகள்

மனித சமுதாயத்தின் மிகப் பழமையான நிறுவனமாக குடும்பம் திகழ்கிறது. குடும்பம் என்பது ஆண்களின் அதிகாரச் செயல்பாட்டினால் கட்டிக் காக்கப்படுகிறது. பிறப்பு முதல் தன் வாழ்வின் இறுதி மூச்சு வரை ஒரு பெண் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மிகப் பலவாகும். குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களை ஏற்று சமூக அமைப்பிற்கு கட்டுப்பட்டு மீற முடியாமல் தவிக்கும் ஒரு சில பெண்களையும், சிக்கல்களை எதிர்கொண்டு போராடும் அநேக பெண்களையும் சு.தமிழ்ச்செல்வி தனது படைப்பில் சித்தரித்துள்ளார்.

## குடும்ப அமைப்பில் பெண்கள் நிலை

குடும்பம் என்னும் நிறுவனத்தின் நங்கூரமாகப் பெண் கருதப்படுகிறாள். குடும்பத்தை கட்டிக்காக்கும் பொறுப்பு பெண்ணுக்கு மட்டுமே உரியதாகி விட்டது. ஆண் பெண் இணைந்து வாழும் குடும்பத்தில் பெண் மட்டுமே குடும்பத்தை கட்டிக் காப்பவளாக பண்டைய காலந்தொட்டு தீர்மானிக்கப்படுகிறது.

'கண்ணகி' புதினத்தில் ஆசைத்தம்பி தன் இரண்டாவது மனைவியின் பேச்சைக் கேட்டு முதல் மனைவி கண்ணகியை அடித்த அடியில் அவளின் வயிற்றில் இருந்த குழந்தை இறந்து விடுகிறது. வருத்தம் தாங்காத கண்ணகி புலம்பியது.

"ராத்திரி ஆசைத்தம்பி அடித்த அடிக்கும் உதைத்த உதைக்கும் வேறு ஒருத்தியாய் இருந்திருந்தால் இந்நேரம் செத்தே போயிருப்பாள். மாட்டுக் கறியால் கொழுத்த ஒடம்பில்லயாடி ஒனக்கு என்று சொல்லிச் சொல்லி அடித்தாலும் கூட அந்தக்கறி தின்று வளர்ந்த ஊக்கத்தால் தான் இன்று இவ்வளவையும் தாங்கி கொள்ள முடிகிறது என்று நினைத்தாள். அடியும் உதையும் இன்றைக்கா நேற்றைக்கா? இந்த வீட்டுக்கு வந்த இரண்டு வருடத்திற்குள் உடலெங்கும் எத்தனை வெட்டு எத்தனை குத்து"[1] (கண் - ப.52) என

வருந்திய கண்ணகி கணவனின் அடக்கு முறைக்கு அடங்கி குடும்பத்தில் இருந்து விலகாமல் வாழும் குடும்ப கட்டமைப்பைக் காண முடிகிறது.

**கணவனின் கடுஞ்சொற்கள்**

கணவன் மனைவியிடம் அன்பாக இருக்க வேண்டும். ஒருவரையொருவர் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். இருவருக்கும் விட்டுக் கொடுத்து போகும் மனப்பான்மை இருந்தால் குடும்பத்தில் கணவனுக்கும், மனைவிக்கும் இடையே பிரச்சனை ஏற்படாது. ஒவ்வொரு பெண்ணும் கணவனின் தீய செயலைத் தைரியமாகக் கேட்டால் தவறு செய்வதற்குக் கணவன் அச்சப்படுவான் அதனால் சிக்கல் ஏற்பட வாய்ப்பு இருக்காது.

கண்ணகி ஆசைத்தம்பியைக் காதலித்து மணந்தாள். ஆசைத்தம்பி ஆசைப்பட்டு மணந்தவளை தனியாக விடுத்து வேறு இரு பெண்களை மணந்து கொண்டு கண்ணகியை தனித்து விட்டுவிட்டான். அவள் கணவனின் அன்பிற்காக ஏங்கித் தவித்தாள் கண்ணகி. அவனது குடும்பத்திற்காக அயராது உழைக்கிறாள். ஆனால் ஆசைத்தம்பியோ அவளை முற்றும் புறக்கணித்ததோடு மட்டுமின்றி அடித்து துன்புறுத்துகிறான். இதனால் மணமுடைந்த கண்ணகி வீட்டை விட்டு வெளியேறி என்ன செய்வதென்றே தெரியாமல் பாண்டிச்சேரிக்குச் சென்று விடுகிறாள். அங்கு எதிர்பாராமல் திவ்யநாதனின் உதவி கிடைத்தது. அவன் செய்த உதவிக்கு கைம்மாறாய் அவனது விருப்பத்திற்கு அடிபணிந்து தந்தை யாரென்றே வெளியில் சொல்ல இயலாமல் ஒரு குழந்தையை பெற்றாள். அக்குழந்தையை அநாதை விடுதியில் சேர்த்து விட்டு சிங்கப்பூருக்கு அன்சாரி வீட்டில் வேலை செய்யப் போகிறாள். அங்கு அன்சாருடன் சேர்ந்து பதினான்கு ஆண்டுகள் வாழ்ந்தாள். அநாதை விடுதியில் இருந்த கண்ணகியின் மகனைத் தன் மகன் என நம்பி ஆசைத்தம்பி அழைத்து வந்து படிக்க வைத்தான். கண்ணகி கணவன் அழைப்பை ஏற்று திரும்பி வந்து விடுகிறாள். அவளிடமிருந்த பணம், நகைகளை எல்லாம் தன் சொந்த நலனுக்காக வாங்கி அனுபவித்த ஆசைத்தம்பி அவளது நடத்தை குறித்து கேவலமாக பேசுகிறாள்.

“இந்த ஆட்டப் பாக்குக்குள்ள எனக்கு அவன் நெனப்புதான் வருது வூடுபூரா அவன் வாங்கிக் கொடுத்த பொருளாகவே இருக்கு நீ இப்ப எங்கூட வாழுறியா அவங்கூட வாழுறியான்னே தெரியல.. ஒன்ன நல்லாவே மயக்கி வச்சுருக்கிறான். அந்தத்துலுக்கப்பய அவனையே தான் நெனச்சிக்கிட்டு இருக்குற நீ”[2] (கண் - ப.16)என்று எந்நேரமும் அவள் மனம் நோகப் பேசுவதால் கண்ணகி கணவனோடு வாழாது பிரிந்து செல்கிறாள். ஆணாதிக்கத்தின் கொடுமையில் பெண்கள் குடும்பத்தில் நிம்மதி இழந்து வாழும் போக்கை கண்ணகி பாத்திரம் வாயிலாக அறிய முடிகிறது.

ஆண்களின் கடுஞ்சொல்லை எதிர்க்கப் பெண்கள் குடும்பத்திலும் சமதாயத்திலும் விழிப்புணர்வு பெற வேண்டும் என்றால் கல்வி அறிவும் உலக அறிவும் தேவை. ஆண்கள் செய்யும் தவறை எதிர்த்து கேட்கத் துணிவுதேவை பெண்ணிற்கு என்ற சிந்தனையே பெண்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது.

**மாமியார் மருமகள் உறவு**

“காலம் காலமாய்ப் பெண்ணை அடிமைப்படுதி நடத்தி வருகின்ற சமூகத்தின் பிரதிநிதிகள் ஆண்கள் மட்டுமல்லர் ஆணாதிக்க போக்கிற்கு வலிமை சேர்க்கின்ற பெண்களும் இருக்கின்றனர்.”[3] (ம.இ.பெ.ப.30)என்பதற்கேற்ப பெண்களுக்குக் கணவனால்

ஏற்படும் பிரச்சனைகளுடன் மாமியார், நாத்தனார், மருமகள் முதலிய பெண்களே பெரும்பாலான நேரங்களில் பிரச்சனைகளை ஏற்படுத்துபவர்களாய் அமைந்து வருவதுண்டு. மாமியாருக்கு பணிந்து அவர்கள் சொல் கேட்டு நடந்து கொண்டால் குடும்பத்தில் சண்டை வராது.

கண்ணகியின் மாமியார் நாகம்மாள் அவள் வேலை செய்து கொண்டு வரும் பணத்துக்காக அவளைத் தன்னுடன் வைத்திருந்தாள். அவளது மகன் ஆசைத்தம்பி சூடாமணி என்னும் பெண்ணை இரண்டாவதாய்த் திருமணம் செய்ய ஆசைப்படுவதைத் தெரிந்து கொள்கிறாள். நாகம்மாள் வசதி வாய்ப்புள்ள சூடாமணி வீட்டைப் பார்த்ததும் அவளை விட மனமில்லாமல் கோவிலுக்குக் கூட்டிட்டுப் போய் கல்யாணத்தைச் செய்து வைத்து ஆசைத்தம்பியையும் சூடாமணியையும் வீட்டிற்கு அழைத்து வந்தாள் நாகம்மாள். எந்நேரமும் உழைத்துக் குடும்பத்துக்கு அயராமல் கொண்டு வந்து போட்டுக் கொண்டிருக்கும் கண்ணகியை இழந்து விடவும் நாகம்மாளுக்கு மனம் வரவில்லை. கண்ணகியிடம் "தானா ஓடி வந்தவளாயிருந்தாலும் நீ தான் யாம் மருமவ இது சும்மா பாடி உறவும் சரி பன மரத்து நெழலும் சரி. எத்துன நாழிக்கு நிலைக்கும்? பாக்கத்தான் போறம்... யான் மவனப்பத்தி எனக்குத் தெரியாதா? அக்கர பச்ச இக்கர பச்சன்னு அவன் மனம் போனபடி போயிக்கிட்டே இருந்தான்னா உன்னோட வாழ்க்கை என்னா ஆகும் நெனச்சிப்பாரு. அதான் அவன் போக்குல போயி ஆட்டுல கொண்டாந்து சேத்தேன். ஓம்புருசன் தான் அவன் புதுசா வந்த செறுக்கி. அவள் பாத்தாலே எனக்குப் பத்திக்கிட்டு தான் வருது. என்ன செய்யிறது வெரட்டிவிட்டா மொதலுக்குமில்ல மோசமாய் போயிடும்"[4] (கண் - ப.62) என்று கூறிச் சமாதானப்படுத்துகிறாள். மருமகளைத் தன் மகளாய் எண்ணி நடத்தாமல் வஞ்சத்துடன் நடந்து கொள்ளும் மாமியார்களால் மருமகள்கள் படும் இன்னல்கள் குடும்பத்தில் ஏராளமாக இருந்து வருகிறது. மருமகளின் உழைப்பையும் பொருளையும் விரும்பும் மாமியார் மகனுடன் மகிழ்ச்சியாக வாழ விடாது கொடுமை செய்யும் மனநிலை மாற்றம் பெற வேண்டும்.

**பெண்கள் எதிர்க்கொள்ளும் சமூகச் சிக்கல்கள்**

பெண்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை ஆண்களைச் சார்ந்தே வாழ வேண்டும் என சமூக மரபு வலியுறுத்துகின்றது. ஆண்குடும்ப அமைப்பைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் பெண் அதை நிறைவேற்றி குடும்பமானத்தை காக்கும் பொறுப்புடையவளாகவும் இருப்பதையே சமூகம் பரிந்துரைக்கிறது.

**பெண்பிறப்பு**

சமூகத்தளத்தில் பெண் சில உரிமைகளைப் பெற்றாலும் பிறப்பால் ஒதுக்கப்பட்டே இருக்கின்றாள். பெண்ணைத் தாயாகவும், தெய்வமாகவும் கருதும் சமுதாயம் பெண் பிறப்பை மட்டும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

"பெண்ணை வாழ்க என்று கூத்திடுவோமடா

பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா"[5] (பா.க.பா.-1)

என்று பெண்பிறப்பை இருபதாம் நூற்றாண்டு கவிஞர் பாரதியார் உயர் உள்ளத்தோடு வரவேற்றுப் பாடுகிறார்.

**பெண்ணடிமை நிலையும் ஆணாதிக்கமும்**

ஆணின் ஒழுக்கக் கேட்டைப் பெரிதாக எண்ணாத சமுதாயம் பெண் மட்டும் கற்பு நெறியுடன் வாழ வேண்டும் என எதிர்ப்பார்க்கிறது. திருமணம் என்று வரும் பொழுது மாப்பிள்ளை வீட்டார் பெண்ணின் கற்பை சோதித்தறியும் நிலை இன்றைய சமூகத்திலும் நிலவி வருகிறது. கண்ணகி மனதில் வேறு ஆடவரை மணந்து கொள்ளலாம் என்று எண்ணினாளே தவிர சமுதாயத்திற்கு அஞ்சி நடப்பவளாக கண்ணகி இருந்தாள். கணவன் மறுமணம் செய்து கொண்ட போது வீட்டை விட்டு வெளியேறாத கண்ணகி ஆணாதிக்க வன்முறை அதிகமாகவே வீட்டை விட்டுவெளியேறி பாண்டிச்சேரி வந்த கண்ணகிக்கு திவ்யநாதனின் உதவி கிடைத்தது. அடிக்கடி சகோதிரியின் வீட்டில் தங்க ஏற்பாடு செய்கிறான். அடிக்கடி சகோதரி வீட்டிற்கு வரும் திவ்யநாதனுக்கும் கண்ணகிக்கும் நெருக்கம் ஏற்படுகிறது. அப்பழக்கம் அவள் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாக வழிவகுக்கிறது.

பின் சிங்கப்பூர் செல்லும் கண்ணகி வேறு வழியின்றி அன்சாரோடு வாழ்ந்தாலும் நாளாக நாளாக அவனோடு வாழும் வாழ்க்கை அவளுக்கு மிகவும் பிடித்துப் போகிறது. ஊருக்கு வர வேண்டும் என்ற எண்ணம் வரவே இல்லை. 14 ஆண்டுகள் அவனுடன் வாழ்கிறாள். கணவனிடம் திரும்பி வந்த பிறகும் அன்சாருடன் இருந்த தொடர்பை துண்டிக்காமல் இறுதிவரை அவனுடன் பழகுபவளாகக் இருந்தாள் கண்ணகி. கணவனின் வன்முறையால் பிற ஆடவரின் அன்பை நாடத்தூண்டியது கண்ணகி சிந்தனை.

அன்பு இல்லாத ஆடவருடன் வாழ்வதை விட அன்புள்ளம் கொண்டவருடன் வாழ்வது சரி என்று எண்ணிய கண்ணகியின் மனம் அன்பிற்காக பெண்மையை இழந்த நிலையை சுட்டுகிறது.

**முடிவுரை**

குடும்பத்தில் தலைமைப்பண்பு பெற்ற ஆணும் பெண்ணுமே குடும்பத்தைக் கட்டிக் காக்க வேண்டும். குடும்பத்திலும் சமூகத்திலும் பெண் சுதந்திரமாகச் செயல்பட ஆணாதிக்கத்தில் இருந்தும், பண்பாட்டு மரபிலிருந்தும் முழுமையும் வெற்றி பெறவேண்டும். சமுதாயத்தில் பெண் பிறப்பும், பெண்கல்வியும் வரவேற்கப்பட வேண்டும்.ஆணாதிக்கப் போக்கில் இருந்து முற்றிலும் நீங்கப் பெறுவதே பெண் விடுதலைக்கு வழிகாட்டும் பாலியல் வன்முறை உள்ளிட்ட சிக்கல்களிலிருந்து பெண் விடுதலை பெற அவளின் கல்வியே கைகொடுக்கும். ஆண் சார்பு இல்லாத பெண் தன் திறமையாலும், அறிவாலும் மனவலிமையாலும் உழைப்பாலும் தனித்து வாழ்ந்து உயர்நிலையைப் பெற்றுவிட முடியும் என செயலால் நிகழ்த்தி வருகின்றார்கள் பெண்கள். இந்நாவலில் இடம் பெற கண்ணகியை திறமை மிக்க பாத்திரமாகவே ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

**அடிக்குறிப்புகள்**

1. கண்ணகி ப.52
2. கண்ணகி ப.176
3. உதயகுமார் – மகளிர் இதழ்களின் பெண்ணியம் - ப.30
4. கண்ணகி – ப.62
5. பாரதி.கவி.பெண் பா.1